2019.01.01 திகதியில் மீதி	**27,000,000.00**	**-**	**1,263,418.00**	**-**	**(19,474,854.20)**	**8,788,563.80**
அங்கத்துவ கட்டண தேறிய வருமானம் 2020	-	-	4,600.00	-	-	4,600.00
காலப்பகுதிக்கான மிகை/ பற்றாக்குறை 2020	-	-	-	-	3,222,288.35	3,222,288.35
ஆரம்ப மீதியை சீராக்கல்	-	-	-		602,251.32	602,251.32
2020.01.01 திகதியில் மீதி	**27,000,000.00**	**-**	**1,268,018.00**	**-**	**(15,650,314.53)**	**12,617,703.47**
பங்களிப்பு மூலதனம்/நிதி	23,200,000.00	-	-		-	23,200,000.00
அங்கத்துவ கட்டண தேறிய வருமானம் 2021	-	-	(10,000.00)		-	(10,000.00)
காலப்பகுதிக்கான மிகை/ பற்றாக்குறை 2021	-	-	-	-	3,543,062.69	3,543,062.69
முந்திய கால சீராக்கல்	-	-	-	-	701,000.00	701,000.00
2021.12.31 திகதியில் மீதி	**50,200,000.00**	**-**	**1,258,018.00**	**-**	**(11,406,251.84)**	**40,051,766.16**
ஆரம்ப மீதியை சீராக்கல்	-	-	-	-	(1,010,414.63)	(1,010,414.63)
அங்கத்துவ கட்டண தேறிய வருமானம் 2022	-	-	-	-	-	-
காலப்பகுதிக்கான மிகை/ பற்றாக்குறை 2022	-	-	-	-	(3,978,820.06)	(3,978,820.06)
முந்திய கால சீராக்கல்	-	-	-	508,049.08	-	508,049.08
2022.12.31 திகதியில் மீதி	**50,200,000.00**	**-**	**1,258,018.00**	**508,049.08**	**(16,395,486.53)**	**35,570,580.55**

துருசவிய நிதியம்		
2022.12.31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று		
	2022 (ரூபா.)	**2021 (ரூபா.)**
செயற்பாட்டு நடவடிக்கையிலான காசுப்பாய்ச்சல்		
சாதாரண செயற்பாடுகளிலிருந்து மிகை/பற்றாக்குறை	(3,978,820.06)	3,543,062.69
ஆரம்ப மீதி சீராக்கல்	(1,010,414.63)	701,000.00
குறைத்தல் :		
வட்டி வருமானம்	(1,535,953.68)	(498,743.70)
செயற்பாட்டு நடவடிக்கையிலான தேறிய காசுப்பாய்ச்சல்	**(6,525,188.36)**	**3,745,318.99**
நிதியல்லாத வேறுபாடுகள்		
பெறுமான தேய்வு	3,225,536.64	4,969,043.51
ஒதுக்கங்கள்	508,049.08	-
பணிக்கொடைக்கான ஒதுக்கீடு	606,945.65	(2,659,000.10)
வர்த்தக மற்றும் ஏனைய பெறுகைகள்	(482,427.67)	71,706.24
கையிருப்பு கூடிக்குறைதல்	(1,193,036.61)	1,270,103.71
செலுத்தவேண்டிய செலவுகளில் கூடிக்குறைதல்	1,002,385.06	(727,576.48)
மொத்த வருமானம்	1,155,874.20	(1,155,874.20)
செயற்பாட்டு நடவடிக்கையிலான தேறியது	**(1,701,862.01)**	**5,513,721.67**
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்		
சொத்து மற்றும் உபகரணங்கள்	1,336,596.17	(399,778.00)
வட்டி பெறுகை	840,536.78	494,126.23
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்	**2,177,132.95**	**94,348.23**
நிதி செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்		
அங்கத்துவ பண பங்களிப்பு	-	(10,000.00)
நிதி செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்	**-**	**(10,000.00)**
தேறிய நிதி அதிகரிப்பு/குறைவு தேறிய காசு மற்றும் காசுக்கு சமமானவை	475,270.94	5,598,069.90
ஆரம்ப காலப்பகுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை	21,865,251.08	16,267,181.18
இறுதி காலப்பகுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை	**22,340,522.02**	**21,865,251.09**

துருசவிய நிதியம

2022.12.31 திகதியில் பாதீடு மற்றும் செயலாற்றுகை

வருமானம்	உண்மை பெறுமானம் (ரூபா)	பாதீடு செய்யப்பட்டது (ரூபா)	முன்னேற்றம
அரச மானியம் - மூலதனம்	8,320,000.00	18,000,000.00	46.22%
அரச நன்கொடை - மீண்டெழும்	27,725,000.00	29,000,000.00	95.60%
ஏனைய வருமானம்	1,630,653.68	-	
மொத்த வருமானம்	**37,675,653.68**	**47,000,000.00**	**80.16%**
மீண்டெழும் செலவு			
சம்பளம், வேதனம் மற்றும் ஊழியர் நன்மைகள்	19,417,548.98	19,224,000.00	101.01%
பயண கொடுப்பனவு	109,185.15	276,000.00	39.56%
வழங்கல் மற்றும் நுகர்வு	9,365,387.43	9,500,000.00	98.58%
ஏனைய செலவுகள்	197,868.59	-	0.00%
தேய்வு	5,110,181.89	-	0.00%
மீண்டெழும் செலவு மொத்தம்	**34,200,172.04**	**29,000,000.00**	**117.93%**
மூலதன செலவு			
அபிவிருத்தி செலவுகள்	2,696,844.19	10,650,000.00	25.32%
புகைவீடு செயற்றிட்டம்	779,459.00	3,000,000.00	25.98%
பால் வெட்டும் செயற்றிட்டம்	3,880,819.91	4,250,000.00	91.31%
ஆளணி பயிற்சி	97,178.60	100,000.00	97.18%
மூலதன செலவு மொத்தம்	**7,454,301.70**	**18,000,000.00**	**41.41%**
செலவுகளின் மொத்தம்			
மூலதன செலவு	7,454,301.70	18,000,000.00	41.41%
மீண்டெழும் செலவு	34,200,172.04	29,000,000.00	117.93%
மொத்தம்	**41,654,473.74**	**47,000,000.00**	**88.63%**

கணக்கீட்டு நடைமுறைகள் மற்றும் குறிப்புகள்

1. துருசவிய நிதி நிறுவன தகவல்

1.1 சட்டபூர்வத் தன்மை மற்றும் அமைவிடம்

துருசவிய நிதியம் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றத்தினால் 2000 ஆம் ஆண்டு 23 ஆம் இலக்க துருசவிய நிதிய சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட கூட்டுதாபனமான இது இல 39, ஸ்ரீ சுபதிபுர பத்தரமுல்ல இடத்தில் அமைந்துள்ளது.

1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் செயற்பாட்டு தன்மை

(அ) சிறு தோட்ட இறப்பர் உரிமையாளர்களுக்கு சேமிப்பு பழக்கத்தை துண்டுதல் மற்றும் அவர்களது சமூக, பொருளாதார நிலைமையை மேம்படுத்தல்

(ஆ) இறப்பர் கைத்தொழில் சார்பான முக்கிய முதலீடுகளை மேம்படுத்தல்

(இ) சிறு தோட்ட இறப்பரின் அறுவடையை உற்பத்தி பொருளாக மாற்ற தேவையான இறப்பர் பால் பதணிடல் மற்றும் இறப்பர் தொழிற்சாலை, ஏனைய வசதிகளை பெற்றுக்கொள்ள மேம்பாடுகளை மேற்கொள்ளல் அல்லது உருவாக்கல்

(ஈ) இறப்பர் பதணிடல் பிரிவுகளின் அல்லது கைத்தொழிற்சாலைகளின் விற்பனையை மேம்படுத்தலும் அதிகரித்தலும்

(உ) சிறு தோட்ட இறப்பர் அபிவிருத்தி சங்கங்களை (துருசவிய சங்கம்) பதிவுச் செய்தல், சீரமைத்தல், நிதியத்தில் பதிவுப்பெற்ற சங்க உறுப்பினர்களுக்கு உதவிக் கொடுப்பனவுகளை வழங்குதல்

(ஊ) சிறு தோட்ட இறப்பர் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுப்பட்டுள்ளவர்களின் வளர்ச்சிக்காகவும் நன்மைக்காகவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2. முதன்மை கணக்கீட்டு கொள்கைகள்

ய. பொதுவான கொள்கைகள்

2.1.1 தயாரிக்கும் முறை

நிறுவனத்தின் நிதி கூற்றுகளில் நிதி நிலைமை தொடர்பான கூற்று, நிதி செயலாற்று அறிக்கை, உரிமை மாற்றல் கூற்று, காசு பாய்ச்சல் கூற்று, வரவு செலவு திட்டம், உண்மை செயலாற்றுகை கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளின் குறிப்பு, கவனித்தில் கொள்ள வேண்டிய கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் உள்ளடக்கப்படும். இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட, இலங்கை கணக்கீட்டு பிரிவின் கணக்கீட்டு கொள்கைகளுக்கமைய அட்டுறு அடிப்படையில் கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

2.1.2 அளவீட்டு அடிப்படை

வரலாற்று கிரய அடிப்படையில் நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.1.3 பிரதான கணக்கீட்டு கொள்கைகளின் சாராம்சம்

தொடர்ச்சியாக இயங்குதல் என்ற எண்ணக்கரு அடிப்படையில் நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், கணக்கீட்டு கொள்கைகள் மாற்றமின்றி காணப்பட்டுள்ளது. அரச மானியம் GPC (Group Processing Income), வருமானம், கடன் வட்டி, சேமிப்பு கணக்கு வட்டி, நிலையான வைப்பு வட்டிகளில் கிடைக்கும் வருமானத்தில் நிதியை பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறான திரண்ட நிதி தேவைப்படுமிடத்து நிறுவன பொறுப்புகளை நிறைவேற்ற பயன்படுத்தலாம்.

நிதிக்கூற்று தயாரிப்பின் போது பிரதான கணக்கீட்டு கொள்கைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்கணக்கீட்டு கொள்கைகள் வேறு முறைகளில் குறிப்பிடபடாவிட்டால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து வருடங்களிலும் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

3. சொத்து மதிப்பீடும் அதன் கணக்கீட்டு முறையும்

3.1 இருப்பு கணக்கெடுப்பு

வழக்கற்றுப் போன மற்றும் செயலிழந்த பொருட்களுக்கு குறைப்புக்கள் வழங்கப்படட பிறகு, தேறிய நிகர பெறுமதி அல்லது கிரயத்தில் குறைந்த பெறுமதி மதிப்பிடப்படுகின்றன. தேறிய நிகர பெறுமதி என்பது இருப்புகளை சாதாரண விலையின் கீழ் விற்கக்கூடிய விலையாகும். மேலும் மதிப்பிடப்பட்ட கிரயம் மற்றும் விற்பனைக்கான மதிப்பிடப்பட்ட செலவு ஆகியவற்றையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். சரக்குகளை தற்போதைய இருப்பிடத்திற்கு கொண்டு வருவதற்கான செலவு மேற்கொள்ளப்பட்ட கிரயம் மற்றும் பின்வரும் செலவு சூத்திரத்தைப் பயன்படுத்தி இருப்பு கணக்கிடப்படுகிறது.

மூலப்பொருட்கள் - FIFO (First In First Out) உண்மை கிரய அடிப்படையில்

குறைவேலை - நேரடி பொருட்களின் கிரயம், கூலி மற்றும் சாதாரண செயற்பாட்டு திறன் அடிப்படையில் நிலையான உற்பத்தி பொது செயற்பாட்டு கிரயத்தின் பொருத்தமான பகுதி

முடிவுப்பொருள் - நேரடி பொருட்களின் கிரயம், கூலி மற்றும் சாதாரண செயற்பாட்டு திறன் அடிப்படையில் நிலையான உற்பத்தி பொது செயற்பாட்டு கிரயத்தின் பொருத்தமான பகுதி

நுகர்வு பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் - FIFO (First In First Out) உண்மை கிரய அடிப்படையில்

பொதி செய்தல்/ மறைமுக மற்றும் வேறு பகுதிகள் - FIFO (First In First Out) அடிப்படையில் உண்மை செலவுகளில்

3.2 காசும் காசுக்கு சமனானவையும்

காசு மற்றும் காசுக்கு சமனானவை என விளக்கம் கூறப்பட்டுள்ளதென்பது கேட்டவுடன் வைப்பு, குறுங்கால அதிக திரவ தன்மை முதலீடு, தெரிந்த நிதி அளவில் இலகுவாக மாற்றம் செய்யக்கூடிய மற்றும் மதிப்பில் ஏற்படும் மாற்றத்தின் குறிப்பிடத்தக்க ஆபத்துக்கு உட்பட்டது. காசுப்பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக காசு மற்றும் காசுக்கு சமனானவை, கையிலுள்ள காசு, வங்கி மேலதிகப்பற்றுகளில் தேறிய வங்கி வைப்புகளை கொண்டது. காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்படுவது நேரில் முறையிலாகும்..

3.3 ஆதனம் மற்றும் உபகரணங்கள்

3.3.1 செலவு / மதிப்பீடு

ஆதனம் மற்றும் உபகரணங்கள் வரலாற்று கிரயத்தில் திரட்டப்பட்ட தேய்மானம் மற்றும் திரட்டப்பட்ட இழப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த வரலாற்றுச் கிரயத்திற்கு சொத்தின் அதன் எதிர்பார்த்த பயன்பாட்டிற்காகவும், குறிப்பிடத்தக்க புதுப்பித்தலுக்காக செயல்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்கு நேரடியாகக் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவுகளும் உள்ளடங்கும்.

ஆதனம் மற்றும் உபகரணங்களின் ஒரு பகுதி வெவ்வேறு பயன்பாட்டு காலத்தை கொண்டிருக்கும் போது, அவை ஆதனம் மற்றும் உபகரணங்களின் தனித்தனி பொருட்களாக (முக்கிய கூறுகள்) கணக்கிடப்படுகின்றன.

3.3.2 மீண்டெழும் செலவுகள்

எதிர்பார்க்கப்படும் எதிர்கால பொருளாதாரப் பயனைப் பெறுதல் அல்லது பராமரிப்பு செய்தல், ஆதனம் மற்றும் உபகரணங்களை பழுதுப்பார்த்தல் அல்லது பராமரிப்பு செய்தல் என்பனவாக மேற்கொள்ளப்படும் செலவுகள் ஏற்கனவே மதிப்பீடு செய்யப்பட்ட நடவடிக்கைகாக மேற்கொள்ளும் போது செலவாக கருதப்படும்.

3.3.3 பெறுமானத்தேய்வு

பெறுமானத்தேய்வு மதிப்பிடப்படுவது கணக்கீட்டு நோக்கத்திற்காக எஞ்சிய பெறுமதியுடைய அதன் நன்மைபயக்க கூடிய ஆயுட்காலத்தில் சொத்துகளை அகற்ற மதிப்பீடு செய்யப்பட்டுள்ள விகித அடிப்படையில் எளிய முறை பயன்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றது.

மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம், தற்போதைய மற்றும் ஒப்பீட்டு காலங்களுக்குப் பயன்படுத்தப்படும் மதிப்பிடப்பட்ட தேய்மான விகிதங்கள் பின்வருமாறு

கணிணி உபகரணங்கள்	10 வருடத்திற்கு மேல்	10%
அலுவலக தளபாடங்கள்	10 வருடத்திற்கு மேல்	10%
அலுவலக உபகரணங்கள்	10 வருடத்திற்கு மேல்	10%
இயந்திரங்கள்	05 வருடத்திற்கு மேல்	20%
மோட்டார் வாகனங்கள்	05 வருடத்திற்கு மேல்	20%
கணிணி மென்பொருள்	04 வருடத்திற்கு மேல்	25%

4. பொறுப்புகள் மற்றும் ஏற்பாடுகள்

4.1 ஏற்பாடு

கடந்த கால நிகழ்வின் விளைவாக நிதியத்திற்கு தற்போதைய கடமை (சட்ட அல்லது ஆக்கபூர்வமான) இருக்கும் போது ஒரு ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகிறது. அதன் பொறுப்பைத் தீர்ப்பதற்கு பொருளாதார நன்மைகளை உள்ளடக்கிய வளங்களின் மேலதிகம் தேவைப்படுவதோடு பொறுப்பின் அளவு பற்றிய நம்பகமான மதிப்பீட்டை உருவாக்க முடியும்.

4.2 ஓய்வூதிய கொடுப்பனவு

4.2.1 வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம் - பணிக்கொடை

வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம் என்பது வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்தைத் தவிர வேறு வேலைவாய்ப்புக்குப் நன்மைத் திட்டமாகும். வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம் தொடர்பான நிதிக்கூற்றுகளில் அடையாளம் காணப்பட்டுள்ள பொறுப்பு, அறிக்கையிடப்பட்ட திகதியில் வரையறுக்கப்பட்ட நன்மைப் பொறுப்பின் தற்போதைய மதிப்பாகும். LKAS - 19 இல் கூறப்பட்டுள்ளபடி, பணிக்கொடை சூத்திரத்தை பயன்படுத்தி, வரையறுக்கப்பட்ட நன்மை பொறுப்பு ஆண்டுதோறும் கணக்கிடப்படுகிறது.

SLPSAS 19, "பணியாளர் பிரதிலாபம்" இணங்க அனைத்து ஊழியர்களுக்கும் பணியின் முதல் வருடத்தில் இருந்து ஓய்வு பெறும் பணிக்கொடையை வழங்க ஏற்பாடு உள்ளது. இருப்பினும், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் கீழ், 5 ஆண்டுகள் தொடர்ச்சியான சேவையை முடித்த பின்னரே ஒரு ஊழியருக்கு பொறுப்பு எழுகிறது.

பொறுப்பு வெளிப்புறமாக நிதியளிக்கப்படவில்லை

பங்களிப்பைக் கணக்கிடுவதற்கு அடிப்படைச் சம்பளம் மற்றும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகள் கருதப்படுகின்றன.

4.2.2 வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - EPF மற்றும் ETF

நிலைமைகள் மற்றும் பிரமாணங்களுக்கேற்ப ஊழியர் சேமலாப பங்களிப்பு நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு பங்களிப்பு நிதி என்பவற்றிற்கு ஊழியர்கள் தகுதியுடையவர்கள். துருசவிய நிதியத்தினால் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றிற்கு முறையே 15% மற்றும் 3% பங்களிப்பு செய்யப்படுகின்றது.

4.3 எதிர்பார பொறுப்பு

ஒப்பந்த அடிப்படையில் சம்பள அதிகரிப்பு குறைக்கப்பட்டமைக்கு எதிராக துருசவிய நிதியத்தின் 5 முகாமைத்துவ உதவியாளர்களினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது இந்த வழக்கை தொழிலாளர் நியதிச் சபை விசாரித்து வருகிறது. பிடித்தம் செய்யப்பட்ட சம்பளம் நிதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. நிறுவனம் 2022 டிசம்பர் 31 வரை எந்த ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை.

5. வருமான அறிக்கை

5.1 வருவாய் அங்கீகாரம்

5.1.1 அரசு மற்றும் பிற மானிய உதவிகள்

தேசிய வரவு செலவுத் திணைக்களம் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் இருந்து கணிசமான தொகையை ஒதுக்குகிறது. SLPSAS 11 இன் படி, மூலதன மானியங்களில் அபிவிருத்திச் செலவுகளைத் தவிர்த்து கொள்வனவு செய்யப்பட்ட மூலதனப் பொருட்கள் மூலம் மூலதனமாக்கப்பட்டதும் மற்றும் மூலதன மானியம் நிறுவனத்தின் வருமானமாக நிறுவனம் ஏற்றுக்கொள்கின்றது.

5.1.2 சொத்தை அகற்றுவதில் இலாபம் அல்லது இழப்பு

ஆதனம், தொழிற்சாலை மற்றும் உபகரணங்களை அகற்றுவதில் வருவாய் தன்மையின் இலாபம் அல்லது இழப்பு நிதி செயலாற்றுகை அறிக்கையில் கணக்கிடப்படுகிறது.

5.1.3 வட்டி வருமானம் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகிறது

5.1.4 பிற வருமானம் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகிறது

துருசவிய நிதியம்

2022.12.31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்கு குறிப்பு

1 ஆதன கிரயம் மற்றும் உபகரணங்கள

1.1 கிரயம்

சொத்துகள	ஆரம்ப மீதி ரூபா	ஆண்டில் கொள்வனவு, ரூபா	அகற்றல் மற்றும் உரித்தளித்தல் ரூபா	2022.12.31 திகதியில் மீதி ரூபா
கணணி உபகரணங்கள்	2,438,798.28	19,722.23	197,222.30	2,261,298.21
கணணி மென்பொருள்	578,933.00	-	-	578,933.00
அலுவலக உபகரணங்கள்	1,403,236.00	110,208.78	808,684.90	704,759.88
அலுவலக மர தளபாடங்கள்	949,595.13	181,766.98	446,035.87	685,326.24
இயந்திர உபகரணங்கள்	392,702.18	196,351.09	392,702.18	196,351.09
மோட்டார் வாகனங்கள்	23,200,000.00	-	-	23,200,000.00
	28,963,264.59	**508,049.08**	**1,844,645.25**	**27,626,668.42**

1.2 பெறுமான தேய்வு

சொத்துகள	ஆரம்ப மீதி ரூபா	ஆண்டில் கொள்வனவு, ரூபா	அகற்றல் மற்றும் உரித்தளித்தல் ரூபா	2022.12.31 திகதியில் மீதி ரூபா
கணணி உபகரணங்கள்	1,072,678.85	224,157.60	197,222.30	1,099,614.15
கணணி மென்பொருள்	217,962.39	144,733.20	-	362,695.59
அலுவலக உபகரணங்கள்	1,016,602.48	52,523.65	808,684.90	260,441.23
அலுவலக மர தளபாடங்கள்	657,196.64	48,767.40	446,035.87	259,928.17
இயந்திர உபகரணங்கள்	392,702.18	-	392,702.18	-
மோட்டார் வாகனங்கள்	4,534,623.69	4,640,000.04	40,000.00	9,134,623.73
	7,891,766.23	**5,110,181.89**	**1,884,645.25**	**11,117,302.87**

	2022 ரூபா.	2021 ரூபா.
1.3 புத்தகங்களில் தேறிய பெறுமதி	**16,509,365.55**	**21,071,498.36**

	2022 ரூபா	2021 ரூபா.
2 காசு மற்றும் காசுக்கு சமமானவை		
வங்கி கணக்கு இல: 014100163254138	-	10,895,132.60
வங்கி கணக்கு இல: 208100123254138	261,766.76	-
மக்கள் வங்கி சேமிப்பு கணக்கு	-	1,313,532.80
மக்கள் வங்கி சேமிப்பு கணக்கு	1,625,383.84	-
நிலையான வைப்பு	20,453,371.43	9,656,585.69
	22,340,522.03	**21,865,251.09**
3 வர்த்தக மற்றும் ஏனைய பெறுகைகள்		
இறப்பர் சீட் கொள்வனவு முற்பணம்	490,472.26	490,472.26
தராசு கடன்	242,275.00	242,275.00
டயமன்ரோல் கடன்	93,362.50	93,362.50
	826,109.76	**826,109.76**

		2022	2021
		(ரூபா.)	(ரூபா.)
	முத்திரை முற்பணம்	-	890.00
	வைப்பு	6,500.00	6,500.00
	எரிபொருள் முற்பணம்	100,000.00	25,000.00
	பால் வெட்டும் செயற்றிட்ட முற்பணம்	691,000.00	-
	முற்பணம்	990,000.00	1,000,000.00
	கரவிட்ட குடியேற்ற கடன் திட்டம்	-	200,000.00
	மீள செலுத்த வேண்டிய வைப்பு	6,000.00	6,000.00
	திரண்ட விவசாய உதவிகள் 50%	1,561.43	74,243.76
		1,795,061.43	**1,312,633.76**
		2,621,171.19	**2,138,743.52**
	நிலையான வைப்புக்கான திரண்ட வட்டி	810,430.49	115,013.59
		810,430.49	**115,013**.59
	வர்த்தக மற்றும் ஏனைய பெறுகைகள	**3,431,601.68**	**2,253,757.11**
4	**திரண்டவருமானம்**		
	திரண்ட மூலதனம	-	1,155,874.20
		-	**1,155,874.20**
5	**திரண்ட செலவீனம்**		
	திரண்ட மின் கட்டணம்	24,080.01	6,526.96
	திரண்ட நீர் கட்டணம்	11,183.87	3,789.67
	திரண்ட எரிப்பொருள்	-	28,992.00
	திரண்ட ஏனைய செலவுகள்	90,529.86	11,160.00
	திரண்ட போக்குவரத்து கொடுப்பனவு	6,575.00	8,975.00
	திரண்ட பயிற்சி மற்றும் தெளிவூட்டல் செயற்திட்டம்	-	3,890.32
	திரண்ட மேலதிக நேரக் கொடுப்பனவு	20,958.56	3,874.53
	திரண்ட சங்கம் அமைத்தல் மற்றும் சங்க வலுப்படுத்தல் செலவு	38,942.00	17,722.00
	திரண்ட காகிதாதிகள் மற்றும் அலுவலக வேண்டுகோள்	19,463.18	2,430.00
	திரண்ட பாதுகாப்பு கட்டணம்	71,920.00	87,850.00
	திரண்ட புகைவீட்டு திட்ட மானியம்		30,226.04
	திரண்ட வாகன பராமரிப்பு	100,907.00	-
	திரண்ட தொலைபேசி கட்டணம்	10,957.99	-
	திரண்ட சுத்திகரிப்பு கட்டணம்	33,650.00	-
	திரண்ட பால் வெட்டும் பயிற்சி செயற்றிட்ட செலவு	45,206.61	-
	திரண்ட போக்குவரத்து செலவு	3,500.00	-
		477,874.08	**205,436.52**
6	**அரச மானியம்**		
	மூலதனம்	8,320,000.00	18,000,000.00
	மீண்டெழும்	27,725,000.00	31,290,166.46
		36,045,000.00	**49,290,166.46**

		2022 (ரூபா.)	2021 (ரூபா.)
7	**ஏனைய வருமானம்**		
	ஏனைய வருமானம்	94,700.00	61,845.43
	இறப்பர் சீற் கொள்வனவு பங்களிப்பு	-	26,120.00
	நிலையான வைப்புக்கான வருடாந்த வட்டி	1,492,202.64	460,110.14
	சேமிப்புக்கான வருடாந்த வட்டி	43,751.04	38,633.56
		1,630,653.68	**586,709.13**
8	**சம்பளம், வேதனம் மற்றும் ஊழியர் நன்மைகள்**		
	சம்பளம்	11,513,059.82	11,610,943.53
	வாழ்க்கை செலவு கொடுப்பனவு	2,246,400.00	2,308,800.00
	விசேட கொடுப்பனவு	2,554,600.00	675,600.00
	ஊழியர் சேமலாப நிதி கொடுப்பனவு	1,928,918.97	1,952,961.53
	ஊழியர் நம்பிக்கை நிதி கொடுப்பனவு	385,783.80	390,592.32
	முகாமைத்துவ சபை கொடுப்பனவு	120,000.00	99,000.00
	மேலதிக நேர கொடுப்பனவு	61,840.74	95,444.74
	பணிக்கொடை	606,945.65	(2,659,000.10)
		19,417,548.98	**14,474,342.02**
9	**பயண கொடுப்பனவு**		
	பயண கொடுப்பனவு	**109,185.15**	**263,503.40**
		109,185.15	**263,503.40**
10	**நுகர்வு பொருட்கள் மற்றும் வழங்கல்**		
	தபால் மற்றும் தொடர்பாடல் செலவு	124,610.80	74,684.60
	மின்சார செலவு	203,715.99	179,686.75
	நீர் செலவு	121,099.52	78,372.31
	அச்சு,காகிதாதி மற்றும் அலுவலக உபகரண செலவு	655,921.57	719,532.63
	எரிபொருள் செலவு	1,833,279.50	887,447.00
	கூலி மற்றும் தேசிய வரி	1,980,000.00	1,980,000.00
	வாகன பராமரிப்பு	1,700,997.35	2,740,914.75
	இயந்திர மற்றும் உபகரண பராமரிப்பு	242,997.50	234,750.00
	போக்குவரத்து செலவு	28,500.00	1,200.00
	பத்திரிகை மற்றும் வார சஞ்சிகை	12,010.00	5,760.00
	கணக்காய்வு செலவு	500,000.00	400,000.00
	தொலைபேசி	631,089.97	741,805.28
	மேம்படுத்தல் மற்றும் விளம்பர செலவு	-	132,030.00
	கணக்காய்வு மற்றும் குழு செலவு	90,000.00	58,370.00
	போசணை செலவு	77,113.73	60,962.50
	அலுவலக பராமரிப்பு செலவு	12,320.50	42,237.25
	பாதுகாப்பு கட்டணம்	776,015.00	1,058,189.50
	சுத்திகரிப்பு சேவை கட்டணம்	375,716.00	351,104.00
		9,365,387.43	**9,747,046.57**

		2022 (ரூபா.)	2021 (ரூபா.)
11	**அபிவிருத்தி செலவு**		
	இறப்பர் பால் சேகரிக்கும் கோப்பை மற்றும் கம்பி பகிர்ந்தளிப்பு	27,506.25	4,000,000.00
	பயிற்சி மற்றும் தெளிவூட்டல் நிகழ்ச்சி செலவு	541,027.00	603,583.87
	சங்கங்களை அமைத்தல் மற்றும் வலுவூட்டல் செலவு	1,354,147.19	495,527.40
	இறப்பர் பால் உறையும் பாத்திர பகிர்ந்தளிப்பு	691,645.00	-
	வைர மற்றும் மென்மையான ரோல் ஜோடிகள் பகிர்ந்தளிப்பு	27,506.25	2,095,081.10
	கிராமிய மட்டத்தில் சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களை வலுப்படுத்தல்	27,506.25	6,993,500.00
	ஆளணி பயிற்சி	-	320,000.00
	இறப்பர் பால் சேகரிக்கும் கோப்பை மற்றும் கம்பி பகிர்ந்தளிப்பு	97,178.60	99,929.00
	இறப்பர் பால் வடிக்கட்டல் செலவு	27,506.25	-
		2,794,022.79	**14,607,621.37**
12	**ஏனைய செலவுகள்**		
	வங்கி கட்டணம்	17,317.39	36,444.00
	ஏனைய செலவுகள்	157,551.20	203,728.48
	தங்குமிட செலவுகள்	23,000.00	-
		197,868.59	**240,172.48**

தவிசாளர்
துருசவிய நிதியம்

துருசவிய நிதியத்தின் முடிவுற்ற 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 திகதிக்கான நிதிக்கூற்றுகள் மற்றும் ஏனைய சட்ட ஒழுங்கு விதிமுறைகளின் தேவைக்கிணங்க 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அறிக்கை

……..

1. நிதிக்கூற்றுகள்

……

1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

……

துருசவிய நிதியத்தின் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 திகதிக்கான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற வருடத்திற்கான நிதி செயலாற்றுக்கை அறிக்கை, சொத்து அசைவுகூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற வருடத்திற்கான காசுபாய்ச்சல் கூற்று மற்றும் நிதிநிலமைக்கூற்றுகளுக்கான குறிப்புகள், சுருக்கமிடப்பட்ட முக்கிய கணக்கீட்டு கொள்கைகளை உள்ளடக்கிய 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 திகதி முடிவுற்ற வருடத்திற்கான நிதிநிலைமைக் கூற்று இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைபின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க 2018 ஆம் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் மற்றும் 1971 ஆம் 38 இலக்க நிதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது கட்டளைக்கமைய கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரைக்கமைய இந்த அறிக்கை மிக விரைவில் பாராளுமன்றத்ததில் சமர்பிக்கப்படும்.

நிதியத்தின் நிதிக்கூற்றுகளில் 2022 டிசம்பர் 31 திகதிக்கான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற வருடத்திற்கான அதன் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை அரசின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலையில் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய (இ.க.நி) நான் கணக்காய்வினை மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களுக்கமைய எனது பொறுப்பு, இவ்வறிக்கையின் நிதிக்கூற்றுகள், கணக்காய்வு தொடர்பாக காணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகள் போதுமானதானதும் பொருத்தமானதெனவும் என நான் நம்புகின்றேன்.

1.3 நிதிக்கூற்று தொடர்பில் முகாமைத்துவத்தின் மற்றும் கட்டுபாட்டு தரப்பினரின் பொறுப்பு

இவ் நிதிக்கூற்று இலங்கை அரச கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரித்தல் மற்றும் நியாயமாக வெளிப்படுத்துதல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணங்களால் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுபாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்று தயாரிக்கும் போது நிதியத்தினை தொடர்ந்து நடாத்தி செல்லும் வாய்ப்பினை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகாமைத்துவம் நிதியத்தினை முடிவுறுத்த தீர்மானிக்குமாயின் அல்லது வேறு வழிமுறைகள் காணப்படாத சந்தர்ப்பத்தில் செயற்பாட்டினை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தை தவிர தொடர்ந்து இயங்கும் என்ற அடிப்படையில் கணக்கீடு மேற்கொள்ளல் மற்றும் நிதியத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டிற்கான காரணங்களை கண்டறிதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் நடவடிக்கை தொடர்பான பொறுப்பானது கட்டுபாட்டை மேற்கொள்ளும் தரப்பினரால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவிற்கமைய நிதியத்தின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்க கூடிய வகையில் வருமானங்கள், செலவீனங்கள் சொத்துகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையாக புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு.

.....

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

கணக்காய்வின் ஒரு பகுதியாக வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு எண்ணத்திற்கு அடிப்படைகளை திரட்டும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுபாட்டின் செயற்திறன் கருத்தை தெரிவிக்கும் பொருட்டு, சந்தர்ப்பத்திற்கேற்ப உகந்த கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுபாடு தொடர்பான புரிந்துணர்வு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தபாடு கணக்கீட்டு மதிப்பீடு நியாயமான மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்கள் பாராட்டப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குதல் தொடர்பில் போதுமான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பது தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் அடிப்படையில் கணக்கீடு தொடர்பில் நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குதல் என்றடிப்படையில் மேற்கொள்ளல் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. போதுமான உறுதியற்ற தன்மை காணப்படுகின்றது

என்பதை நான் எதிர்வு கூறுவேனாயின் நிதிக்கூற்றுகளில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கைகளில் அவதானத்தை செலுத்த வேண்டும் அதேவேளை அவ்வெளிப்படுத்தல்கள் போதுமற்றதாயின் எனது நிலையை மாற்ற வேண்டும். எது எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அடிப்படையில் தொடந்து இயங்குதலை முடிவுறுத்த முடியும்.

- நிதிக்கூற்றுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றிக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உகந்ததாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதையும் வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய ஒட்டுமொத்த நிதிக்கூற்றுகளில் சமர்பித்தல் பாராட்டுக்குரியதாகும்.

எனது கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கிய கணக்காய்வு கண்டறிதல்கள், பிரதான உள்ளக கட்டுபாடு குறைபாடுகள் மற்றும் ஏனைய காரணங்கள் தொடர்பில் கட்டுபாடுகளை மேற்கொள்ளும் தரப்பினர்களுக்கு தெரியப்படுத்தினேன்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

.....

2.1 2018 ஆம் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் கீழ் கூறப்படும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 ஆம் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(அ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கேற்ப கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுப்படுத்தல்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் எனது ஆய்வின் படி முறையான நிதி அறிக்கை நிதியத்தினால் நடாத்திச் செல்லப்பட்டுள்ளது.

2.1.2 2018 ஆம் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) (111) பிரிவின் தேவைப்பாட்டிற்கமைய நிதியத்தினால் வழங்கப்பபட்ட நிதிக்கூற்றுகள் கடந்த காலத்துடன் ஒத்ததாகும்.

2.1.3 2018 ஆம் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) (iv) பிரிவின் தேவைப்பாட்டிற்கமைய என்னால் முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கு பகுதி 2.1 (அ) கூறப்பட்டுள்ள அவதானிப்புகள் தவிர கடந்த வருடத்தில் என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.2 கடைப்பிடிக்கப்பட்ட செயன்முறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகள் அடிப்படையிலும் போதுமான காரணங்களுக்கான கட்டுப்படுத்தல் மூலமும் கீழ் காணப்படும் கூற்றுக்களை வழங்ககூடிய வகையில் எவையும் எனது கவனத்திற்கு உள்ளாகவில்லை.

2.2.1 2018 ஆம் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாட்டிற்கமை கீழ் காணப்படும் அவதானிப்புகளை தவிர யாதேனும் எழுத்து மூலமான சட்டத்திற்கு அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமையாதவாறு செயற்பட்டுள்ளமையாக

2.2.2 2018 ஆம் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஊ) பிரிவின் ஏற்பாட்டுக்கு அமைய யாதேனும் எழுத்து மூலமான சட்டத்திற்கு அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமையாதவாறு செயற்பட்டுள்ளமையாக

சட்டதிட்டங்கள்/ஏற்பாடுகள்	**அவதானிப்புகள்**
……..	…….
(அ) 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆந் திகதி வெளியிடப்பட்ட 01/2020 அரச நிதி சுற்றறிக்கையின் 9.1 பந்தி	குறித்த நடவடிக்கைக்காக வழங்கப்பட்ட முற்பணம் அந்நடவடிக்கை நிறைவுச் செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் மீள செலுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும் நிறுவனத்தினால் 2020 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட ரூபா 174,530 பெறுமதியான 12 முற்பணம் மீள செலுத்த 14 நாட்கள், 271 நாட்கள் இடையே தாமதம் ஏற்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.
(ஆ) 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 29 திகதி வெளியிடப்பட்ட அரச நிர்வாக சுற்றறிக்கை 30/2016 இன் 3.3 பந்தி	சுற்றறிக்கையின் பிரகாரம் ஏரிபொருள் பயன்பாடு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளாமை
(இ) இலங்கைச் சனநாயக சோசலி~க் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் இல 1645(அ)	ஒவ்வொரு வாகனங்களுக்கும் முறையான மற்றும் சீராக முழுமைப்படுத்தப்பட்ட வாகன குறிப்பு பதிவேடுகள் பராமரிக்க வேண்டும். இருப்பினும் 03 வாகனங்களுக்கு வாகன குறிப்பு பதிவேடுகள் பராமரிக்க படவில்லை. அத்துடன் பாரமரிக்கப்பட்ட வாகன குறிப்பு பதிவேடுகளில் வானகம் தொடர்பான விபரங்கள், எரிபொருள் பாவணை, பழுதுபார்ப்பு தொடர்பான தகவல்கள் முழுமைப்படுத்தபடாமை.

2.2.3 2018 ஆம் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவின் ஏற்பாட்டுக்கு அமைய நிதியத்தின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் முறையற்ற வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்தமையாக

2.2.4 2018 ஆம் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஏ) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வளங்கள் சிக்கனத்துடனும் வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் காலவரையறைகளில் குறிப்பிட்ட சட்டத்திட்டங்களுக்கமைய கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்படாமையாக

2.3 வேறு கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) 2018 ஆம் ஆண்டு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் நிதியத்திற்கு நன்கொடையாக வழங்கிய மரத்தளபாட உபகரணங்கள் 89 அலகுகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) துருசவிய நிதியத்தில் 13 மாவட்டங்களில் 818 துருசவிய சங்கங்கள் பதிவுச் செய்யப்பட்டிருந்தும் மதிப்பாய்வு வருடத்தில் இறுதியில் 293 சங்கங்கள் செயலிலந்து காணப்பட்டது.

(இ) துருசவிய நிதியத்தினால் களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி மற்றும் கம்பஹா ஆகிய 04 மாவட்டங்களில் 31 துருசவிய சங்கங்களுக்கு வழங்கியிருந்த முற்பணம் மற்றும் கடன்களில் 05 வருடங்களுக்கும் மேல் கிடைக்க வேண்டிய மீதி ரூபா 826,109 அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதி செயலகத்தினால் நிதியத்திற்கு வழங்கிய இலக்கம் 65-1090 உடைய ஜீப் வண்டி பழுதுபார்ப்பு நடவடிக்கைகளுக்காக 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பழுதுபார்ப்பு நிலையத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்தும் 2023 ஆம் ஆண்டு மே மாதம் வரை ஜீப் வண்டி பழுதுபார்ப்பு நடவடிக்கைகள் நிறைவுச் செய்யப்பட்டு அலுவலகத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(உ) 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஜனாதிபதி செயலகத்தினால் துருசவிய நிதியத்திற்கு வழங்கிய இலக்கம் KW 3039 உடைய போஜோ கார் கொண்டு வரப்பட்ட திகதியிலிருந்து இயங்கு நிலையில் இருக்காத அதேவேளை வாகன பழுதுபார்ப்பு நடவடிக்கைகளுக்காக போதிய நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் பழுதுபார்ப்பு செய்யாமல் 03 வருடங்களுக்கு அதிக காலம் துருசவிய நிதிய வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.

(ஊ) மதிப்பாய்வு வருடத்தில் ரூபா 3,000,000 மதிப்பீட்டு பெறுமதி கொண்ட உயர்தரத்திலானதும் செயற்திறன் வாய்ந்ததுமான 20 புகை வீடுகள் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டிருந்தும் வருட இறுதியில் 12 புகை வீடுகள் மட்டுமே துருசுவிய சங்கங்களால் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(எ) 2021 ஆம் ஆண்டு துருசுவிய சங்ன உறுப்பினர்களுக்கு நூற்றுக்கு 50 வீத சலுகை அடிப்படையில் பகிர்ந்தளிக்க 4,000 பால் வெட்டும் கத்திகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மதிப்பாய்வு வருடத்தில் 1,740 பால் வெட்டும் கத்திகள் மட்டும் துருசுவிய சங்கங்களுக்கு பகிர்ந்தளிப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டு பயிற்சி செயற்றிட்டத்திற்காக 150 பால் வெட்டும் கத்திகள் வழங்கப்பட்ட பின்னர் புத்தகத்திற்கேற்ப 2023 பெப்ரவரி 01 ஆந் திகதிக்கு மீதி 2,110 ஆயினும் அன்றைய தினத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வின் போது 1,989 கத்திகள் மட்டுமே மீதியாக காணப்பட்டது. எஞ்சிய 121 கத்திகள் வழங்கப்பட்டமைக்கான எழுத்து மூர சாட்சிகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 1,680,705 பெறுமதியான 1,989 கத்திகள் மேல் தளத்தில் வெளிப்பகுதியொன்றில் வைக்கப்ட்டிருந்தமையால் அவை துருபிடித்து பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டதுடன் தீ, களவாடல், உக்கலடைதல் மற்றும் வீண்விரயமாதலால் இருப்பு சேதமடைதலை தடுக்க பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தரினால் நி.ஒ 751(5) பிரகாரம் முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை.

டப்ளிவ்.பி.சி. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி